**கொடபொல பிரதேச சபை**

**மாத்தறை மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 04 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 29 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

----------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கொடபொல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-------------------------------------------------------------------------------------------------------

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளுராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

-------------------------------------------

மீளாய்வாண்டிற்கான சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களுடன் அக் கணக்குகள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வீதவரி மற்றும் வாடகை தொடர்பாக முன்வரும் காலங்களுக்காகக் கிடைத்திருந்த ரூபா 28,495 தொகையினை நிதிக் கூற்றுக்களில் காட்டாமல் நிலுவைத் தொகைக்கு சமப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,027,316 தொகை எனினும் வருமானச் செலவுக் கணக்கில் அழைப்பாணக் கட்டணம் மற்றும் தண்டப்பணம் வரவுத் தலைப்பிற்கு ரூபா 811,886 தொகையொன்று மாத்திரமே செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ரூபா 1,215,430 இற்கான தொகையொன்று குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2013 மார்ச் 15 திகதி கொள்வனவு செய்திருந்த உபகரணங்களின் பெறுமதி ரூபா 81,480 இல் ரூபா 31,480 தொகை மாத்திரம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் செலுத்தப்படாது காணப்பட்ட ரூபா 50,000 தொகை மீளாய்வாண்டிற்கான செலவுகளுக்கு வரவு வைத்து கடன்கொடுத்தோர்களுக்கான ஏற்பாடு செய்திருக்கவில்லை.

(ஈ) வீதி விளக்குகள் பராமரிப்பதற்காக 2013 ஆண்டின் போது பராமரிப்பாளர் படி ரூபா 35,800 தொகையினை சம்பளங்கள் படிகள் செலவுத் தலைப்பிற்கு வரவு வைக்கப்படாமல் போக்குவரத்து தொடர்பாடல் அவசியமானவை மற்றும் ஏனைய சேவைகள் செலவு விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முதலீடுகளின் கீழ் எடுக்கப்படக்கூடாத ரூபா 518,682 பெறுமதியான நான்கு கணக்கு மீதிகள் முதலீடுகள் என கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்கில் காட்டப்படுகின்ற நான்கு கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 44,083,088 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 32,651,343 என காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 11,431,745 ஆக காணப்பட்டது.

1.3.5 தொங்கல் கணக்குகள்

-----------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,154,043 இற்கான தொங்கல் கணக்குகளில் வரவு மீதி தீர்க்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்டுள்ளது.

1.3.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 9,272,118 ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 9,317,103 ஆகும்.

1.3.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 23,040,565 பெறுமதியான 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

1.3.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| | விதி 218 | காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறையேனும் பரிசோதனை மேற்கொள்வற்காக தலைவரினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் 2002/02 கொண்ட திறைசேரி சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள் கருவிகள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,596,838 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,070,615 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 1,093 | 1,017 | 461 |
| வாடகை | 4,451 | 5,115 | 1,160 |
| ஏனைய வருமானங்கள் | 26 | 25,672 | 44,670 |

2.2.1 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் இருந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 271,334 தொகையான்று நீதிமன்றத் தண்டப்பணம் கிடைக்க வேண்டியுள்ளது.

2.2.2 நீர்க் கட்டணம்

---

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் செயற்படும் நீர்ச் செயற்திட்டத்தின் மூலம் நீர் வசதிகள் வழங்கிய நீர் நுகர்வோரினால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 687,149 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 முகாமைத்துத் திறமையின்மை

---

(அ) வீதி விளக்குகள் பராமரிப்பு உதவிகளை மீளளிப்பு செய்வதற்காக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாமையால் 2009 முதல் 2013 ஆண்டுகளுக்காக ரூபா 162,648 தொகையொன்று மீளளிப்பு செய்யப்படாமல் காணப்பட்டது. அத்துடன் 2010 ஆகஸ்ட் 17 திகதிய இலக்கம் PE/01/01 மற்றும் 2010 இன் 17 இலக்கம் கொண்ட மின்சக்தி மற்றும் வலுச் சக்தி அமைச்சு செயலாளரின் சுற்று நிருபத்தின் பந்தி 1.2 தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) தெனியாய சினிமா கொட்டகையொன்றில் இருந்து 1995 ஆண்டின் மே மாதம் முதல் 2005 ஜூலை மாதம் வரையான 10 வருட காலப் பகுதியில் சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 419,132 கழியாட்ட வரி அறவீடு செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சபையின் பிரதிநிதிகள் வழக்குத் திகதிகளில் போகாமையால் இந்த வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. அத்துடன் நிலுவைத் தொகையின் அறவீடு செய்ய முடியவில்லை.

3.3 மனித வள முகாமைத்துவம்

---

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியின் வகைகள் | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 01 | - | 01 | 01 |
| மூன்றாம் தர | 01 | 02 | - | 01 |
| இரண்டாம் தர | 19 | 16 | 03 | - |
| ஆரம்ப | 41 | 36 | 05 | - |
| ஏனைய(அமைய, தற்காலிக, ஒப்பந்த) | - | 09 | - | 09 |
| | 62 | 63 | 09 | 10 |

மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து பதவியணி சம்பளம் மற்றும் மந்திரிமார் படி ஆக ரூபா 11,205,500 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது பதவியணி சம்பளம் மற்றும் படியாக ரூபா 16,514,894 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திற்கு ரூபா 5,309,394 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டுள்ளது.

## 4. கணக்கு விடயத் தன்மை மற்றும் நல்லாட்சி

### 4.1 செயற்பாட்டுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபித்தியிருக்கவில்லை.

### 4.3 கொள்வனவுத் திட்டம்

சபையினால் மீளாய்வாண்டிற்காக 2006 ஜனவரி 25 திகதிய இலக்கம் ஜீ.பிர.நி/பி.நி/18 கொண்ட சுற்று நிருபத்தில் 42(ஆ) வின் பிரகாரம் கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் சபையின் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) கலஞ்சிய நிருவாகம்